# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய –

## மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகள்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ ISOA / 11 / 1–2, 11. 10. 2008 ஆம் நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

---

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய – மாநிலத்திற்குள் நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்திருப்பதாலும் மற்றும் 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பு)–இல் அதனை வெளியிட்டிப்பதாலும்,

மற்றும் ஆணையம், மின் கட்டமைப்பு தொடர்பான ஏற்பாடுகளுக்காக வகை செய்யும் மற்றும் கிடைக்கக்கூடிய மின் கட்டமைப்பு கட்டணங்கள் போன்று எவர் தொடர்பாக செய்யப்பட்டதோ அவர் தொடர்பான ஏற்பாடுகளுக்காக நுகர்வோரின் வகையினருக்குப் பொருந்தக்கூடிய மின் கட்டண வீதத்திற்கு வகை செய்யும் மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள 9(7) ஒழுங்குமுறைவிதியில் கிடைக்கக்கூடிய மின் கட்டமைப்பு கட்டணங்களை குறித்துரைத்துள்ளது என்பதாலும்,

மற்றும் இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட தேசிய மின் கட்டண வீதக் கொள்கையின் 8. 5. 6 கூறியுள்ளவாறு, “உரிய ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட நுகர்வோர் வகையினருக்கு தற்காலிக மின்னிணைப்பிற்கான மின் கட்டணவீதத்தை செலுத்துவதன் பேரில், உரிமம்தாரரால் வகை செய்யப்படவேண்டிய திறந்த நுழைவுரிமை, அது தொடர்பான ஏற்பாடுகளின் பேரில், மின் நுகர்வோருக்கு மின்சாரத் தடை ஏற்படும் நேர்வில், மின் சக்தி வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் சட்டத்தின் 86(e) பிரிவின் கீழ் ஊக்க நடவடிக்கையின் சலுகையாக திறந்த நுழைவுரிமை விண்ணப்பக் கட்டணம் மற்றும் உடன்பாட்டுக் கட்டணம் வகுத்துரைப்பதற்கு

உகந்தது என்று கருதுவதாலும்,

மற்றும், தேசிய மின் கட்டணவீத கொள்கையின் மேற்சொன்ன 8. 5. 6கூறுகளின் கீழ்வரும் 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி மற்றும் முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளை பின்வருமாறு திருத்தம் செய்கிறது, அதாவது :–

## <u>2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகள் (இரண்டாம் திருத்த) ஒழுங்குமுறைவிதிகள்.</u>

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை (இரண்டாம் திருத்த) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகள், முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளான 2005, ஆகஸ்டு 3ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. <u>முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 9ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7)ஆம் உள்– ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்</u> :

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 9ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7)ஆம் உள்– ஒழுங்குமுறைவிதியில், –

(a) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறாக மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும் :–

(a) “ திறந்த நுழைவுரிமை நுகர்வோருக்கு மின் சக்தி உண்டாக்கும் இயந்திரம் வழங்குவதில்

தடை ஏற்படும் நேர்வில் அல்லது நிர்ணயிக்கப்பட்ட மின் உற்பத்தி பராமரிக்கப்படாத போது, மேற்சொன்ன நுகர்வோரால் நிர்ணயிக்கப்பட்டதற்கு மிகையாக எடுக்கப்படுகிறபோது, மின் பகிர்வு உரிமம்தாரரால் உடனடியாக கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். இந்த முடிவு பொறுத்து, மின் பகிர்வு உரிமம்தாரர், மின் கட்டமைப்பிலிருந்து வழங்கப்படுவதற்கு கிடைக்கக்கூடிய மின் கட்டமைப்புக் கட்டணங்கள் போன்று நுகர்வோரின் வகையினரிடமிருந்து தற்காலிக மின்னிணைப்பிற்கான மின் கட்டணம் வசூலிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார். ABT(Availability Based Tariff) வகை இந்த மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் போதும், மற்றும் UI (Unscheduled Interchange ) கட்டணங்கள் ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் போதும் அது சமயத்தில் மின் பகிர்வு உரிமம்தாரருக்கு தகுதியுடைய மின் கட்டமைப்பு ஆதரவுக்கட்டணம், (a) நுகர்வோர் வகையினருக்கு தற்காலிக மின்னிணைப்பிற்காகப் பொருந்தக்கூடிய மின் கட்டணமாகவோ, அல்லது (b) பொருந்தக்கூடிய UI (Unscheduled Interchange ) கட்டணமாகவோ, இதில் எது அதிகமானதோ அதுவாக இருத்தல் வேண்டும்.

3. <u>முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 12ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :</u>

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 12ஆம் ஒழுங்குமுறைவிதியில்,

(I) (b)கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :

“ (b) அந்த விண்ணப்பமானது, திருப்பிக் கொடுக்கத்தக்கதல்லாத பின்வரும் விண்ணப்பப் பதிவுக் கட்டணத்துடன் சேர்ந்து போதல் வேண்டும் –

(i) திறந்த நுழைவுரிமை நடவடிக்கையானது மரபு சார்ந்த எரிசக்தி ஆதாரங்களுடன் தொடர்புடையதாக இருக்கிறவிடத்து ரூ.5000/–(ரூபாய் ஐந்தாயிரம்) ; மற்றும்

(ii) திறந்த நுழைவுரிமை நடவடிக்கையானது இணை – மின் உற்பத்தி உள்ளடங்கலான மரபு சாரா மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களின் எரிசக்தி தொடர்பானதாக இருக்கிறவிடத்து, அதிகபட்சமாக ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம்)க்கு உட்பட்டு மெகாவாட் ஒன்றுக்கு ரூ.200/– (ரூபாய் இருநூறு) செலுத்தத்தக்கதாகும். மேற்சொன்ன பதிவுக்கட்டணங்கள்

செலுத்தும் முறையானது மாநில மின் செலுத்தப்பணி நிறுவனத்தினால் (State Transmission Utility) முடிவு செய்யப்பட வேண்டும்.

(II) (f)கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

“(f) சாத்தியக்கூறு நிர்ணயிக்கப்பட்ட பின்பு மற்றும் உடன்பாடு (Agreement ) எழுதிக் கொடுக்கப்படுவதற்கு முன்பு , –

(i) திறந்த நுழைவுரிமை நடவடிக்கையானது, மரபு சார்ந்த எரிசக்தி ஆதாரங்களுடன் தொடர்புடையதாக இருக்கிறவிடத்து, ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம்) ; மற்றும்

(ii) திறந்த நுழைவுரிமை நடவடிக்கையானது, இணை மின் உற்பத்தி உள்ளடங்களான மரபு சாரா மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் தொடர்புடையதாக இருக்கிறவிடத்து அதிகபட்சமாக ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம்)க்கு உட்பட்டு, மெகாவாட் ஒன்றிற்கு ரூ.2000/–(ரூபாய் இரண்டாயிரம்),

திறந்த நுழைவுரிமை உடன்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்